விவசாய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய கோரி

தலைமை செயலகத்தை விவசாயிகள் முற்றுகை

நள்ளிரவிலும் போராட்டத்தால் பரபரப்பு

சென்னை தலைமை செயலகத்தை நேற்று மாலை முற்றுகையிட்ட விவசாயிகள், நள்ளிரவில் எதிரே உள்ள பூங்காவில் போராட்டத்தை தொடர்ந்தனர்.

சென்னை, ஜூலை 28: தவெக தேர்தல் அறிக்கையின்படி, கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள அனைத்து விவசாயக் கடன்களையும் முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தி தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்க தலைவர் அய்யாக்கண்ணு தலைமையில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள், சென்னை தலைமைச் செயலகம் முன் நேற்று மாலை முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, நிருபர்களிடம் அய்யாக்கண்ணு கூறியதாவது: 2022ம் ஆண்டு முதல் விவசாயிகள் கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்ட அனைத்து நிதி நிறுவனங்களிலும் பெற்றுள்ள விவசாய கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும். விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். காவிரி நீரை தமிழகத்திற்கு வழங்காத கர்நாடக அரசு மீது தமிழக அரசு உரிய சட்ட நடவடிக்கை மேற்கொண்டு, ரூ.1 லட்சம் கோடி நஷ்டஈடு பெற்று அதை தமிழக விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

எங்களது கோரிக்கைகளை முதலமைச்சரிடம் நேரடியாக எடுத்துரைப்பதற்காக இன்று காலை அவரை சந்திக்க வந்தோம். ஆனால், டிஜிபி சார்பில் முதலமைச்சரை சந்திக்க ஏற்பாடு செய்வதாக கூறி, எங்களை வீட்டு சிறையில் வைத்தனர். அதன் பின்னரும் இதுவரை முதலமைச்சரை சந்திக்க எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. இதனால் வேறு வழியின்றி தலைமைச்செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டுவருகிறோம். மேலும், விவசாயிகளின் நீண்டகால கோரிக்கைகளுக்கு தமிழக அரசு விரைந்து தீர்வு காண வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். இந்நிலையில் விவசாயிகளின் போராட்டம் நள்ளிரவிலும் நீடித்தது. தலைமை செயலகம் முன் உள்ள பூங்காவிலேயே அவர்கள் படுத்துக்கிடந்தனர். இன்று காலை முதல்வர் மற்றும் வேளாண்மை துறை அமைச்சரை நேரில் சந்தித்து மனு கொடுக்க முடிவு செய்துள்ளனர்.

திமுக எம்எல்ஏ ஜாமீன் மனு : ஐகோர்ட்டில் இன்று விசாரணை

சென்னை, ஜூலை 28: முதலமைச்சர் விஜய்க்கு மிரட்டல் விடுக்கும் வகையில் பேசியதாக விளாத்திகுளம் திமுக எம்.எல்.ஏ. மார்க்கண்டேயனை தூத்துக்குடி மாவட்ட குற்றப்பிரிவு போலீசார் அவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி பாளை மத்திய சிறையில் அடைத்தனர். தனக்கு ஜாமீன் கோரி மார்க்கண்டேயன் தாக்கல் செய்த மனுவை தூத்துக்குடி நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இதையடுத்து, தன்னை சிறையிலடைத்த உத்தரவை ரத்து செய்யக் கோரியும், ஜாமீன் வழங்கக் கோரியும் மார்க்கண்டேயன் தரப்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த மனு, நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தபோது, எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், கைதுக்கான காரணங்களை தெரிவிக்காதது அரசியல் சட்டத்துக்கு எதிரானது. கைதுக்கு முன்பு விசாரணைக்கு அழைத்து எந்த நோட்டீசும் வழங்கப்படவில்லை. ஜூலை 18ம் தேதி நடந்த சம்பவத்துக்கு 19ம் தேதி நள்ளிரவில் புகார் அளிக்கப்பட்டு, 20ம் தேதி அதிகாலை வழக்குப்பதிந்து, அன்றே கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எந்த ஆரம்பகட்ட விசாரணையும் நடத்தப்படவில்லை. பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் உள்நோக்கத்துடன் பேசவில்லை என வாதிட்டார். வாதங்கள் முடிவடையாததையடுத்து விசாரணையை நீதிபதி இளந்திரையன் தள்ளிவைத்தார். விசாரணை இன்றும் நடைபெறவுள்ளது.

வதந்தி பரப்புவதும், கட்சி மாறுவதும் தான் அமைச்சர் நிர்மல் குமாரின் தகுதி

கோமாளி கூட்டத்திற்கு பேச அருகதையே இல்லை

திமுக செய்தி தொடர்பு துணை செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி பதிலடி

சென்னை, ஜூலை 28: சென்னையில் நேற்று திமுக செய்தி தொடர்பு துணைச் செயலாளர் சூர்யா கிருஷ்ணமூர்த்தி நிருபர்களிடம் கூறியதாவது:

அமைச்சர் நிர்மல் குமார் எங்களுடைய தலைவர்கள் குறித்து வாய்க்கு வந்ததை எல்லாம் தரந்தாழ்ந்து பேசி இருக்கிறார். தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர், இந்த அரசினுடைய அமைச்சர் என்கிற தகுதியெல்லாம் மறந்து, பேக் நியூஸ் பரப்பக்கூடிய, வதந்தி பரப்பக் கூடிய அந்த நிலையிலிருந்து எங்களுடைய தலைவர்கள் குறித்து அவர் பேசியிருக்கிறார். அவருடைய தலைவர் எப்படி அநாகரிகமாக பேசுவாரோ, அதே பாணியில், அதே வகையில், அதே வளர்ப்பின் அடிப்படையில் அவர் பேசியிருக்கிறார். ஆனால் எங்கள் தலைவர்கள் எங்களை அப்படி வளர்க்கவில்லை. அதே சமயம் திமுக தலைவர்கள் குறித்து தொடர்ந்து இதுபோல அவர் பேசி வருவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

தகுதி இருக்கா என்று எங்கள் தலைவர்கள் குறித்து கேட்டிருக்கிறார். எது தகுதி? ஒரு டெக்ஸ்டைல் கடைக்கு போனீங்கன்னா அங்க இருக்கக்கூடிய கட்சி வேட்டியெல்லாம் எண்ணீங்கன்னா, அதைவிட அதிகமான எண்ணிக்கையில் பல கட்சிகளுடைய கட்சி வேட்டியை வீட்டு அலமாரியில் வச்சிருக்கக் கூடிய சி.டி.ஆர்.நிர்மல் குமாருக்கு இருப்பதுக்கு பேர் தான் தகுதியா? அவர் பரப்பின வதந்திகள் எத்தனை என ஒரு சென்செக்ஸ் எடுக்கலாம். அவர் போயிட்டு வந்த கட்சி எத்தனை அப்படிங்கிறதை கையால எண்ண முடியாது, அந்த அளவிற்கு வதந்தி பரப்புவதையும் கட்சி மாறுவதையும் மட்டுமே தொழிலாக வைத்திருக்கக் கூடிய சி.டி.ஆர். நிர்மல் குமாருக்கு இருக்கறதுக்கு பேர்தான் தகுதியா? அவருடைய கட்டுப்பாட்டில் இரண்டு துறை இருக்கிறது. ஒன்று மின்சாரத்துறை, சட்டத்துறை.

மின்சாரத் துறையில் தினசரி மின்வெட்டு என்று தமிழ்நாடு முழுக்க போராட்டங்கள் நடக்காத நாளே இல்லை என்கிற அளவிற்கு இரவில் மக்கள் வீதியில் வந்து "எங்களுக்கு கரண்ட் கொடுங்க" என்று நடுரோட்டில் நின்று கதறிக் கொண்டிருக்கிறார்கள். மின்சார கட்டணத்தின் விலை உயர்வு நெஞ்சில் கை வச்சுட்டு உட்காரும் அளவுக்கு ஷாக் அடிக்கக் கூடிய அளவிற்கு உயர்ந்திருக்கிறது. அறிவிக்கப்படாத கட்டண உயர்வாக அது இருக்கிறது. இதுகுறித்தெல்லாம் எந்த பதிலும் இல்லாத, எந்த அக்கறையும் இல்லாத, எந்த அறிவும் இல்லாத சி.டி.ஆர். நிர்மல் குமார் எங்கள் தலைவர்களுடைய தகுதி குறித்து கேள்வி எழுப்புகிறார்.

அவருடைய இன்னொருதுறை சட்டத்துறை. அதில் என்ன நடக்கிறது என்றால், இன்றைக்கு காலையில் எல்லாரும் பார்த்திருப்பீர்கள், ஒரு ஆடியோ வைரல் ஆயிற்று, அரசு வழக்கறிஞர் பதவிக்கு மற்றவர்களுக்கு ரூ.15 லட்சம், உனக்கு ரூ.12 லட்சம் என்று ஏதோ ஆடி ஆபர் கொடுப்பது மாதிரி அரசு வழக்கறிஞர் பதவியை ஆபரில் விற்பது போல் விற்றுக் கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய துறையில் நடக்கக்கூடிய இவ்வளவு பெரிய ஊழல் குறித்து இதுவரைக்கும் சி.டி.ஆர். நிர்மல் குமார் வாய் திறந்திருப்பாரா? இதுகுறித்து கட்டுப்படுத்துவதற்கு எந்த நடவடிக்கையாவது எடுத்திருப்பாரா? இதையெல்லாம் கட்டுப்படுத்த முடியாத அவர் எங்களுடைய தலைவர்களின் தகுதி பற்றி பேசுவது எவ்வளவு நகைச்சுவை, அது ஒரு கோமாளித்தனமான பேச்சாகத்தான் பார்க்கவேண்டியிருக்கிறது.

இன்னொரு பக்கம், பாலியல் புகார் கொடுக்கப்பட்ட ஒரு பெண் தவெக எம்.எல்.ஏ "என்னை மிரட்டுகிறார்" என்று குற்றச்சாட்டு வைக்கிறார். அந்த எம்.எல்.ஏவுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு கொடுக்கிறது இந்த அரசு. ஒரு மந்திரி ஸ்டேடியத்துக்குள் உட்கார்ந்து கொண்டு மாத்திரை நுணுக்குகிறார். அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை.

இன்றைக்கு ஒரு அமைச்சரின் ஆடியோ ரிலீஸ் ஆகியிருப்பதாக தகவல் வருகிறது. அதில் ''கொன்னு வெளியே எடுத்துருவேன்'' ''என் பார்டரை தாண்டாதே'' என்றெல்லாம் டயலாக் இருக்கிறது. இந்த மாதிரியான கேளிக்கூத்தை எல்லாம் செய்யும் தவெக பாசிச கோமாளிக் கூட்டத்திற்கு எங்கள் தலைவர்களை பற்றி பேச தகுதியோ அருகதையோ இல்லை.

பாஜவை கண்டிக்கிறேன்னு விஜய்யை பேச சொல்லுங்க...

"இன்றைக்கு இந்திய நாடு முழுக்க நீட் தேர்வுக்கு எதிராக, பாஜவுக்கு எதிராக மக்கள் போராடி வருகிறார்கள். மாணவர்கள் ரோட்டில் வந்து உட்கார்ந்திருக்கிறார்கள். மாணவர் சமுதாயம் ஒன்று திரண்டு ஒரு மந்திரியையே பதவியிலிருந்து இறக்கியிருக்கிறது. அதுகுறித்து வாயே திறக்காத ஒருவர் இருக்கிறார் என்றால், அவர் இந்த தமிழ் நாட்டின் முதலமைச்சர்தான்.

கோவைக்கும் மதுரைக்கும் மெட்ரோ கிடையாது என்று இரண்டாவது முறையாக ரிஜெக்ட் பண்ணியிருக்கிறார்கள். அதை எதிர்த்து இப்போது வரை முதலமைச்சர் வாயே திறக்கவில்லை. நிதியாண்டின் முதல் குவாட்டரில் போன ஆண்டை விட இந்த ஆண்டு ஒன்றிய அரசாங்கத்தின் நிதி ரூ.2,500 கோடி குறைந்திருப்பதாக செய்தி வருகிறது. அதை எதிர்த்து கேள்வி கேட்பதற்கு இந்த முதலமைச்சருக்கு திராணி கிடையாது. தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாவதாக தான் பாடுவோம் என்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய ஒரு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பப்ளிக்காக செய்தி கொடுக்கிறார். அந்த துணைவேந்தரை கண்டிப்பதற்கு வக்கு கிடையாது. முடிஞ்சா பாஜவைக் கண்டிக்கிறேன், பாஜவை எதிர்க்கிறேன் என்று உங்க தலைவர் ஒரே ஒரு வார்த்தை பேசச் சொல்லுங்கள். நீட் போராட்டத்துக்கு தவெக என்ன செய்தது. ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் ராஜினாமா செய்த பிறகு மாணவர்களை சந்திக்க அமைச்சர் ராஜ் மோகன் செல்கிறார். பாஜ என்ற வார்த்தையை கூட உச்சரிக்க பயம்" என்று சூர்யா கிருஷ்ணமூர்த்தி கூறினார்.

லாட்டரியில் கவனம் செலுத்துபவர்களுக்கு மேகதாது வழக்கு பற்றியெல்லாம் புரியாது

ஆதவுக்கு ரகுபதி பதிலடி

சென்னை அண்ணா அறிவாலயத்தில் திமுக முன்னாள் அமைச்சர் ரகுபதி நேற்று அளித்த பேட்டி: தமிழ்நாட்டிற்குச் சேரவேண்டிய காவிரி நீரைப் போராடிப் பெறுவதிலும், மேகதாது அணை விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாப்பதிலும் திமுக எப்போதும் உறுதியாக இருந்து வந்துள்ளது. தவெக அரசின் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா, நேற்றைய தினம் திமுக அரசின் சட்டப்பூர்வ நடவடிக்கைகள் குறித்து உண்மைக்கு மாறான பல கருத்துகளை தெரிவித்துள்ளார். இந்தியாவிலேயே சிறந்த சட்ட வல்லுநர்களைக் கொண்டு வழக்குகளை சிறப்பாக நடத்தி வெற்றிபெற்ற அரசு திமுக அரசு. ஒரு அமைச்சர் இவ்வாறு பொய்யான தகவலை தெரிவிக்க கூடாது. குழந்தையே பிறக்காத போது பெயர் வைப்பதைப் போன்ற சூழல்தான் இது. ஆனால் ஆதவ் அர்ஜுனாவிற்கு இதெல்லாம் புரியாது, புரிய வாய்ப்பும் கிடையாது. ஏன் என்றால் அவர்கள் லாட்டரியில் கவனம் செலுத்துபவர்கள் இப்போது புதிதாக அரசியலுக்கு வந்திருக்கிறார்கள். மேகதாது அணையைக் கட்டுவதற்கு திமுக அரசு ஒரு சொட்டு கூட, ஒரு படி கூட, ஒரு அங்குலம் கூட அனுமதித்தது கிடையாது. இவ்வாறு அவர் கூறினார்.

7வது நிதிக்குழு அறிக்கை தாக்கல் செய்யும் காலக்கெடு நீட்டிப்பு

தமிழகத்தில் தள்ளிப்போகும் உள்ளாட்சி தேர்தல்?

பயப்படுகிறதா தவெக அரசு என எதிர்கட்சிகள் விமர்சனம்

சென்னை, ஜூலை 28: தமிழகத்தில் 7வது நிதிக்குழு அறிக்கை தாக்கல் செய்யும் காலக்கெடுவை தமிழக அரசு நீட்டித்துள்ளதால் உள்ளாட்சி தேர்தல் தள்ளி போகும் நிலை உருவாகியுள்ளது. இதனால் உள்ளாட்சி தேர்தலை எதிர்கொள்ள தவெக அரசு பயப்படுகிறதா என எதிர்கட்சிகள் விமர்சிக்க தொடங்கியுள்ளன.

தமிழக சட்டமன்ற தேர்தலில் தவெக 108 தொகுதிகளில் மட்டும் வெற்றி பெற்ற நிலையில், திமுக கூட்டணியில் இடம்பெற்றிருந்த கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைத்துள்ளது. முதல்வர் விஜய் தலைமையிலான அமைச்சரவையில் காங்கிரஸ், விடுதலை சிறுத்தைகள், முஸ்லிம் லீக் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றுள்ளனர்.

தவெக அரசுக்கு தனிப் பெரும்பான்மை இல்லாத நிலையில், சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர், இசக்கிசுப்பையா உள்ளிட்ட 6 அதிமுக எம்எல்ஏக்கள் அடுத்தடுத்து பதவியை ராஜினாமா செய்து தவெகவில் இணைந்தனர். எனவே அந்த தொகுதியில் விரைவில் இடைத்தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், திடீர் திருப்பமாக அந்த தொகுதியில் வாக்கு எண்ணிக்கை தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டதால் அந்த தொகுதியில் தேர்தல் நடத்த சென்னை உயர் நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

எனவே வரும் 31ம்தேதி மீண்டும் இந்த வழக்கு விசாரணைக்கு வரவுள்ள நிலையில், அடுத்தகட்ட முடிவு தொடர்பாக உத்தரவு வெளியாகும் என்ற தகவல் கூறப்படுகிறது. சட்டசபை தேர்தலில் அதிக இடங்களை கைப்பற்றி கூட்டணி ஆட்சி அமைத்துள்ள தமிழக வெற்றிக் கழகம், உள்ளாட்சித் தேர்தலிலும் அதே அளவு வெற்றியை பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளது. அதற்கான முயற்சிகளை தீவிரப்படுத்த தொடங்கியுள்ளது.

இந்த பரபரப்பான அரசியல் சூழ்நிலையில் தவெக ஆட்சி அமைந்திருந்தாலும், கவுன்சிலர்கள் முதல் மேயர் வரை தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் திமுக, அதிமுகவினர் மட்டுமே உள்ளனர். எனவே விரைவில் உள்ளாட்சி மன்ற தேர்தல் நடத்தி தவெக அந்த இடத்தை பிடிக்க திட்டமிட்டு வருகிறது. இதற்கான பணிகளை தொடங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

தமிழகத்தை பொறுத்தவரை மாநகராட்சிகள் 25, நகராட்சிகள் 148, பேரூராட்சிகள் 490, ஊராட்சி ஒன்றியங்கள் 388, கிராம ஊராட்சிகள் 12,618க்கும் மேற்பட்டவை உள்ளன. இந்த உள்ளாட்சி அமைப்புகளின் பதவி காலம் பொதுவாக 5 ஆண்டுகள். 2021ம் ஆண்டு உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்றது. இதனால் இந்த ஆண்டின் இறுதி அல்லது 2027ம் ஆண்டின் தொடக்கத்தில் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும் என்கிற எதிர்பார்ப்பு இருக்கிறது.

அந்த வகையில், இந்தாண்டு இறுதியில் இடைத்தேர்தல் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது 7வது மாநில நிதிக்குழுவின் பதவிக்காலத்தை தமிழ்நாடு அரசு நீட்டித்து உத்தரவிட்டுள்ளது. அந்த உத்தரவில், "கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் நிதி நிலையை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள 7வது மாநில நிதிக்குழுவின் காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது. முன்பு நிர்ணயிக்கப்பட்டிருந்த ஆகஸ்ட் 31க்கு பதில் டிசம்பர் 31 என நீட்டிக்கப்பட்டு திருத்தம் செய்யப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக தமிழ்நாட்டில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் விரைவில் நடக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போது தள்ளிப்போகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே உள்ளாட்சித் தேர்தல் இந்த ஆண்டு இறுதியில் இல்லாமல் அடுத்த ஆண்டு ஏப்ரல் அல்லது மே மாதம் நடத்த வாய்ப்பு இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

அதே நேரம் சட்டமன்ற தேர்தலில் முதல்வர் விஜய் மீதான ஈர்ப்பு காரணமாக மக்கள் வாக்களித்துள்ளனர். அது விரைவில் நடைபெறவுள்ள இடைத்தேர்தல் அல்லது உள்ளாட்சி மன்ற தேர்தலில் பிரதிபலிக்காது என திமுக உள்ளிட்ட எதிர்கட்சியினர் கூறுகின்றனர். எனவே உள்ளாட்சி மன்ற தேர்தலை தற்போது நடத்தாமல் காலம் தாழ்த்துவது தோல்வி பயம் என்றும் அவர்கள் விமர்சித்து வருவது தமிழக அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உதயநிதி ஸ்டாலின் தலைமையில்

இன்று திமுக எம்எல்ஏக்கள் கூட்டம்

காணொலி காட்சி வாயிலாக நடக்கிறது

சென்னை, ஜூலை 28: 2026–27ம் ஆண்டுக்கான தமிழக பொது பட்ஜெட் வருகிற ஆகஸ்ட் 5ம் தேதி தாக்கல் செய்யப்பட இருக்கிறது. அதற்கு அடுத்த நாள் (6ம் தேதி) வேளாண் பட்ஜெட் தாக்கல் ஆகிறது. தவெக அரசின் முதல் பட்ஜெட் என்பதால் எதிர்பார்ப்பு அதிகம் நிலவுகிறது. இந்நிலையில், பிரதான எதிர்க்கட்சியான தி.மு.க. உறுப்பினர்கள், பட்ஜெட் கூட்ட தொடரில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும், எந்த பிரச்னைகளை முன்னெடுக்க வேண்டும். விவாதத்தின் போது யார் யார் பேச வேண்டும் என்பது குறித்து எதிர்க் கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் அறிவுரை வழங்க இருக்கிறார். இதற்காக, திமுக எம்எல்ஏக்கள் கூட்டம் இன்று மாலை நடக்கிறது. இதுதொடர்பாக திமுக சட்டமன்ற கொறடா எ.வ.வேலு வெளியிட்ட அறிவிப்பு: எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில், திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டம் 28ம் தேதி (இன்று) மாலை 5 மணி அளவில் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெறும். இதில் திமுக சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். நிதிநிலை அறிக்கை பொருள் குறித்து கூட்டம் நடைபெறும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

உத்தவ் தாக்கரேவுக்கு மு.க.ஸ்டாலின் பிறந்த நாள் வாழ்த்து

சென்னை, ஜூலை 28: திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று தனது சமூக வலைதள பதிவில் கூறியிருப்பதாவது: மும்பையின் சிவாஜி பூங்காவில் நேற்று முன்தினம் திரண்டு வந்து மக்கள் காட்டிய பேராதரவு என்பது, தங்களைப் பலவீனப்படுத்த மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு முயற்சியும் தங்கள் பக்கம் நிற்க மக்களின் உறுதியை மேலும் வலுப்படுத்தவே செய்திருக்கிறது என்பதை ஆணித்தரமாக நினைவூட்டியுள்ளது. நல்ல உடல்நலத்தோடும், தங்களின் தளராத போராட்ட குணத்தோடும் சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெற விழைகிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தவெகவில் சேர்ந்த 6 எம்எல்ஏக்கள் மீது

கட்சித்தாவல் தடை சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்

சபாநாயகரிடம் அதிமுக மீண்டும் வலியுறுத்தல்



சென்னை, ஜூலை 28: சென்னை தலைமை செயலகத்தில் சபாநாயகர் ஜே.சி.டி.பிரபாகரை அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தி நேற்று சந்தித்து மனு அளித்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது: அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மரகதம் குமரவேல் (மதுராந்தகம்), எஸ்.ஜெயக்குமார் (பெருந்துறை), பி.சத்யபாமா (தாராபுரம்), இசக்கி சுப்பையா (அம்பாசமுத்திரம்), எம்.ஆர்.விஜயபாஸ்கர் (கரூர்), சி.விஜயபாஸ்கர் (விராலிமலை) ஆகிய 6 சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களது பதவிகளை ராஜினாமா செய்துவிட்டு தவெக இணைந்தனர். அதிமுக சார்பில் தேர்ந்தெடுக்கப்பட்டு, கட்சிக்கும், தொகுதி மக்களுக்கும் துரோகம் செய்துவிட்டு குதிரை பேரம் மூலம் ஆளுங்கட்சியில் சேர்ந்தவர்கள் மீது கட்சித்தாவல் தடை சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சபாநாயகரிடம் ஏற்கனவே, அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி சார்பில் மனு அளித்து, உரிய நடவடக்கை எடுக்க வலியுறுத்தி வந்தோம். அந்த புகார் மனுவின் மீது சில விளக்கங்களை சபாநாயகர் கேட்டிருந்தார். ஏற்கனவே 3 முறை சபாநாயகருக்கு அதிமுக சார்பில் எடப்பாடி பழனிசாமி கொடுத்த கடிதத்தின் அடிப்படையில் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இந்நிலையில், சபாநாயகரை மீண்டும் சந்தித்து, ஏற்கனவே ராஜினாமா செய்த எம்எல்ஏக்கள் கொடுத்த விளக்கங்களை கேட்டிருந்தோம். அவர்கள் என்ன சொன்னார்கள் என்பது எங்களுக்கு தெரிந்தால்தான், அதற்குரிய பதிலை நாங்கள் சபாநாகருக்கு மீண்டும் தெரிவிக்க முடியும் என்ற அடிப்படையில் இன்று (நேற்று) சந்தித்து கேட்டிருக்கிறேன். சபாநாயகர் தருவதாக கூறியிருக்கிறார். நாங்கள் கேட்ட விவரங்களை அவர்கள் தந்த பின், பொதுச்செயலாளர் உரிய நடவடிக்கை எடுப்பார். இவ்வாறு அவர் கூறினார்.

தவெகவுக்கு போகமாட்டோம்

சி.வி.சண்முகம் ஆதரவாளர்கள் பேட்டி

விழுப்புரம், ஜூலை 28: விழுப்புரம் மாவட்ட அதிமுகவில் சி.வி.சண்முகத்தின் ஆதரவாளர்களுக்கும், இபிஎஸ் நியமித்த புதிய மாவட்ட செயலாளர் பசுபதி ஆதரவாளர்களுக்கும் மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்நிலையில் சி.வி சண்முகம் ஆதரவாளர்கள் சுரேஷ்பாபு, ராதா செந்தில் உள்ளிட்ட நிர்வாகிகள் நேற்று அளித்த பேட்டி: விழுப்புரத்தில் கட்சியை விட்டு நீக்கிய ஒரே மாதத்தில் பசுபதிக்கு மாவட்ட செயலாளர் பதவி வழங்கப்பட்டது விதிகளுக்கு புறம்பானது. பொதுச்செயலாளராக இருக்க இபிஎஸ் சுக்கு தகுதியில்லை. அதனால்தான் தகுதியில்லாதவர்களை நியமித்து வருகிறார். தலைமையை மாற்ற வேண்டும். சசிகலா உள்ளிட்ட யார் வந்தாலும் நாங்கள் ஏற்க தயாராக இருக்கிறோம். சி.வி.சண்முகமும் தவெக உள்ளிட்ட வேறு எந்த கட்சிக்கும் செல்ல தயாராக இல்லை. அதிமுகவில் இருந்து கட்சி பணியாற்றிவோம். விழுப்புரம் மாவட்ட செயலாளர் பசுபதி எங்களை பற்றியும், சண்முகத்தை பற்றியும் பேசி வந்தால் தக்க பதிலடி கொடுப்போம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்

HeroHousing Finance

தொடர்பு முகவரி: ஏ–6, மூன்றாவது தளம், செக்டார்–4, நொய்டா–201301 பதிவு அலுவலகம்: 09, சமுதாய மையம், பசந்த் லோக், வசந்த் விஹார், புதுடெல்லி–110057 தொலைபேசி: 011 49267000, கட்டணமில்லா எண்: 1800 212 8800, மின்னஞ்சல்: customer.care@herohfl.com இணையதளம்: www.herohousingfinance.com | CIN: U65192DL2016PLC30148.

கோரிக்கை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 ("விதிகள்") இன் விதி 3 உடன் பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 ("சட்டம்") இன் பிரிவு 13(2) கீழ்

இவ்வாறிருக்க கீழே கையொப்பமிட்டவர் ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் (எச்எச்எப்எல்) அதிகாரப்பூர்வ அதிகாரியாக இருக்கிறபடியால் சட்டத்தின் கீழ் மேலும் விதிகளின் விதி 3 உடன் பிரிவு 13(12) கீழ் தமக்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி சட்டத்தின் பிரிவு 13(2) கீழ் ஏற்கனவே கீழ்க்காணும் தேதியிட்ட விரிவான கோரிக்கை அறிவிப்புகள் வழங்கி, இதன்கீழ் பட்டியலிடப்பட்ட கடன்தாரர்(கள்)/ உப–கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) (அனைவரும் தனியாக அல்லது கூட்டாக "கடமைதாரர்(கள்)" ஆக குறிப்பிடப்படுவர்)/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) ஆகியோர், கீழே கொடுக்கப்பட்ட விவரங்களின்படி, சம்பந்தப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் குறிப்பிட்டத் தொகைகளை, சம்பந்தப்பட்ட அறிவிப்புத் தேதி/களிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார். மேற்கூறிய அறிவிப்புகளின் பிரதிகள் ஒப்புகையுடன் கூடிய பதிவஞ்சல் A.D. மூலம் வழங்கப்பட்டுள்ளன. மேலும் கீழே கையொப்பமிட்டவரிடம் உள்ளன. மேலும் மேற்கூறிய கடமைதாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்), அவர்கள் விரும்பினால், அனைத்து வேலை நாட்களிலும் வழக்கமான அலுவலக நேரங்களில் கீழே கையொப்பமிட்டவரிடமிருந்து சம்பந்தப்பட்ட நகல்பிரதியை பெற்றுக் கொள்ளலாம்.

மேற்கூறியதன் தொடர்பாக, மேற்கூறிய கடமைதாரர்(கள்) / சட்டப்பூர்வ வாரிசு(கள்) / சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்), அவர்தம் சம்பந்தப்பட்டப் பெயர்களுக்கு எதிரே இங்கே கீழே குறிப்பிட்டத் தொகையை, கீழே நிரல் (D) இல் குறிப்பிட்ட சம்பந்தப்பட்டத் தேதிகளிலிருந்து பணப்பட்டுவாடா மேலும் / அல்லது பணமாக்கும் தேதி வரை, கடன் ஒப்பந்தம் மற்றும் பிற ஆவணங்கள்/பத்திரங்கள், மேற்கூறிய கடமைதாரர்(கள்) மூலம் நிறைவேற்றப்பட்டிட ஏதேனுமிருந்தால் அவற்றுடன், கீழே விவரிக்கப்பட்டவாறு மேற்கொண்டு வட்டியுடன் சேர்த்து, சம்பந்தப்பட்ட அறிவிப்பு/கள் தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வசம் செலுத்துமாறு, இதன்மூலம் மீண்டும் ஒருமுறை அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கடனீடாக, பின்வரும் கடனீட்டுச் சொத்து(கள்) முறையே மேற்கூறிய கடமைதாரர்(கள்) மூலம் ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

கடன் கணக்கு எண்.	கடமைதாரர்(கள்)/சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) பெயர்	கீழ்க்காணும்தேதியன்று மொத்த நிலுவைத்தொகை(ரூ)*	கோரிக்கை அறிவிப்பு நாள் / செயல்படா சொத்து நாள்
HHFSALHOU24000051233, HHFSALLAP24000051280	சங்கர் அங்கப்பன், பரமேஸ்வரி சங்கர்	14.07.2026 தேதியன்று செலுத்த வேண்டிய தொகை ரூ.33,10,218/-	23-July-2026 / 05-07-2026

கடனீட்டுச் சொத்துகள்/அசையாச் சொத்துகள்/அடமான சொத்துகள் விவரம்: சேலம் பதிவு மாவட்டம், தாடகபட்டி சார் பதிவு அலுவலகம், சேலம் தாலுகா, சேலம் ஒன்றியம், எருமப்பாளையம் ஊராட்சி, எருமப்பாளையம் கிராமம் வடக்குப் பகுதியில் உள்ள பழைய S.No.60/1, துணைப் பிரிவிற்குப் பிறகு S.No.60/1A, துணைப்பிரிவிற்குப் பிறகு S.No.60/1A1, துணைப்பிரிவிற்குப் பிறகு, வருவாய் பதிவேடு 60/9–இன் படி புதிய S.No.60/9 இல் உள்ள மொத்த பரப்பளவு 500 சதுர அடி உள்ள மனை எண்: 4–இன் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.4, குமரவேல் நிலத்தின் தென்புறம், தெற்கில்: மனை எண்.5, கிழக்கில்: மனை எண்.9, மேற்கில்: 23 அடி அகல கிழக்கு–மேற்கு சாலை, அளவீடு: கிழக்கு–மேற்காக வடக்கில்: 40 அடி, கிழக்கு–மேற்காக தெற்கில்: 40 அடி, தெற்கு–வடக்காக கிழக்கில்: 12. ½ அடி, தெற்கு–வடக்காக மேற்கில்: 12. ½ அடி, மொத்தம் 500 சதுர அடி பரப்பளவு உள்ள சொத்து அனைத்து பயன்பாட்டு உரிமைகள் மற்றும் பாதையுடன் உள்ளது.

• மேற்குறிப்பிட்ட தேதி சம்பந்தப்பட்ட கோரிக்கை அறிவிப்பில் இன்னும் குறிப்பிட்டு தெரிவிக்கப்பட்டவாறான விகிதத்தில் மேற்கொண்டு வட்டி, கூடுதல் வட்டியுடன், பணப்பட்டுவாடா மற்றும்/அல்லது பணமாக்கும் தேதி வரை ஏற்பட்ட சாதாரண செலவினங்கள், செலவுகள், கட்டணங்கள், ஏனையவற்றுடன் மேற்கூறிய கடமைதாரர்(கள்), மேற்கூறியவாறு ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்கு பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தும் விதிகளின் கீழ், செலவுகள் மற்றும் விளைவுகள் வகையில் முற்றிலும் மேற்கூறிய கடமைதாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) இன் முழு பொறுப்பில் உள்ள மேற்கூறிய கடனீட்டுச் சொத்து(கள்) / அசையாச் சொத்து(களு)க்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும். மேற்கூறிய கடமைதாரர்(கள்)/ சட்டப்பூர்வ வாரிசு(கள்)/ சட்டப்பூர்வ பிரதிநிதி(கள்) ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வ ஒப்புதலின்றி விற்பனை, குத்தகை அல்லது பிற வழியில் மேற்கூறிய கடனீட்டுச் சொத்து(கள்) / அசையாச் சொத்தை பெயர் மாற்றம் செய்வதற்கு மேற்கூறிய சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டிருக்கிறார்கள். சட்டம் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் விதிமுறைகளை மீறும் அல்லது மீறத் தூண்டும் நபர் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டவாறு சிறைதண்டனை மேலும்/அல்லது அபராதம் விதிக்கப்படுவதற்கு துணைப்படுவார்.

நாள்: 28.07.2026, இடம்: சேலம் — ஒம்/- அதிகாரப்பூர்வ அதிகாரி, ஹீரோ ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெடுக்காக

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

GRIHUM HOUSING FINANCE

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா–411014. கிளை அலுவலகம் அலகு: எண்.16, சர்வீஸ் ரோடு, ராமஸ்வாமி ரெட்டி என்க்ளேவ், பனாஸ்வதி, பெங்களூரு–560043.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு

சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு.

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்(கள்)/ உப–கடன்தாரர்(கள்)/ அடமானதாரர்(கள்) / ஜாமீன்தாரர்(கள்) குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்துள்ளார். கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்–ஏலம் மூலமாக 14.08.2026 நாளில் விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்– ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்–ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

வ. எண்	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை (நிர்ணய விலையில் 10%) (F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண்: HL0113H14100269 கார்த்திக் P (கடன்தாரர்), கனிஷ் டிரேடிங் (உப கடன்தாரர்), சாந்தி	கோரிக்கை அறிவிப்பு தேதி: 17.01.2024 17.01.2024 தேதியின்படி மொத்த நிலுவைத் தொகை: ரூ.38,56,543.01/- (ரூபாய் முப்பத்தெட்டு லட்சத்து ஐம்பத்தாறாயிரத்து ஐநூற்று நாற்பத்து மூன்று மற்றும் பைசா ஒன்று மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 17.08% வட்டி.	கையக	கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி பதிவு மாவட்டம், பர்கூர் மற்றும் துணை பதிவு மாவட்டம், பர்கூர் கிராமம், சர்வே எண்.634/27 இல் வறண்ட பரப்பளவு ஹெக்டேர் 0.30.0 Asst ரூ.0.20 உள்ள அனைத்து துண்டுகளும் பகுதிகளும் உள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்து. எல்லைகள் பின்வருமாறு: மேற்கில்: திரு.பி.எஸ்.திம்மி செட்டி மற்றும் பிறருடைய நிலம், வடக்கில்: திருமதி. கமலாவின் வீடு, கிழக்கில்: 20 அடி பொது சாலை, தெற்கில்: திரு.வெங்கடப்பனின் காலி	Rs. 1800000/- (ரூபாய் பதினெட்டு லட்சம் மட்டும்)	Rs. 180000/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்)	13-08-2026 Before 5 PM	10,000/-	04-08-2026 (11AM - 4PM)	14-08-2026 (11 AM-2PM)	DRT-I சென்னை (கடன்தாரர்) DRT வழக்கு எண்.SA/319/2025 உள்ள வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். எந்த பாதகமான உத்தரவும் ஜிஎச்எப்எல்-க்கு எதிராகப் பிறப்பிக்கப்படவில்லை.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும். ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்–ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்முறை மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரசீட்ஸ் அக்கவுண்ட், ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பன்ஜ்ஷில் டெக் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 13.08.2026 ஆம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை எண்.16, சர்வீஸ் ரோடு, ராமஸ்வாமி ரெட்டி என்க்ளேவ், பனாஸ்வதி, பெங்களூரு–560043., மேலும் கைபேசி எண். +91 8281138143, மின்னஞ்சல் முகவரி p.adith@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com– ஐ பார்வையிடவும்.

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்–2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப – கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாட்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

குறிப்பு: உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 28.07.2026 இடம்: பெங்களூரு — ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்